பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 05 திங்கட்கிழமை 19.01.2026 | அதிர்வு 173

## ‘சங்கு’ கூட்டணியின் அரசியல் கூட்டத்தை புறக்கணித்த செல்வம்



(வவுனியா நிருபர்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்குக் கூட்டணி)

02▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### அநுர தரப்புக்கு சி.வி.கே. பகிரங்க எச்சரிக்கை

# வடக்குக்கு வந்து ‘ஷோ’ காட்டுவதை நிறுத்த வேண்டும்

### சிறீதரன், சுமந்திரன் தொடர்பில் அவர்கள் பேசுவதற்கும் அருகதையில்லை என்றும் பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)

“தேசிய மக்கள் சக்தியினர், அரச நிதியில் வடக்குக்கு வந்து ‘ஷோ’ காட்டுவதை நிறுத்த வேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான சிறீதரன், சுமந்திரன் தொடர்பிலோ, கட்சியின் உள்வீட்டு விவகாரங்களிலோ தேசிய மக்கள் சக்தியினர் தலையிட வேண்டிய அவசியமும் தேவையில்லை.

03▸

# சிறுபான்மைக் கட்சிகளின் நிலைவரம் அறியாமல் சிறீதரன் எம்.பி. எடுக்கின்ற தீர்மானங்கள் தவறு!

### ‘சங்கு’ கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் குற்றச்சாட்டு

(கி.வசந்தன்)

“சிறுபான்மைக் கட்சிகளின் நிலைவரங்களை அறியாமல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தீர்மானங்களைத் தனியாகத் தானாக எடுக்கின்றார். அது தவறான நடவடிக்கை.” – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

02▸



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# பிரதமர் விலகும் வரை போராட்டம் தொடரும்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்படவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. திட்டவட்டம்

கல்வி அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் ஹரிணி அமரசூரிய விலகும் வரை எமது போராட்டம் தொடரும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்படவில்லை. அது நிச்சயம் வரும். பிரதமர் கல்வி அமைச்சில் இருந்து விலகும் வரை எமது போராட்டம் தொடரும்." – என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 'சாங்கு' கூட்டணியின்...

கூட்டத்தை அதன் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. புறக்கணித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கிய அரசியல் கலந்துரையாடல் நேற்றுக் காலை முதல் பிற்கல் வரை வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதில் அந்தக் கட்சியின் கூட்டணிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி, சமத்துவக் கட்சி ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கட்சியின் தலைவரும் அக் கூட்டணியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளை, அவரது கட்சி சார்ந்த உயர்மட்ட உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பதுடன் ரெலோவின் சார்பில் பெண் ஒருவர் மாத்திரமே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் மாகாண சபைத் தேர்தல், புதிய அரசமைப்பு, கட்சியின் மாநாடு, பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சிறுபான்மைக் கட்சிகளின்...

"நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் செய்தது தவறான நடவடிக்கை. ஆரம்பத்தில் இருந்து அவர் சிறுபான்மைக் கட்சிகள் சார்பான அங்கத்தவராக அரசமைப்பு சபையில் இருக்கின்றார். ஆகவே, சிறிய கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் என்பவற்றின் நிலவரங்கள் என்ன என்பதை அறிந்துகொண்டு அவர் அந்த இடங்களில் தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஆனால், அவரைப் பொறுத்தவரையில் தனியாகத் தானாக சில தீர்மானங்களை நிறைவேற்றுகின்றார்.

அது எதிர்த்தரப்பில் இருக்கக்கூடிய சிறிய கட்சிகளுக்கோ, சிறுபான்மைக் கட்சிகளுக்கோ விரோதமான முடிவுகளாக இருக்கின்றன. அது நாடாளுமன்றத்தில் நிறைய விமர்சனங்களுக்கு உள்ளாகியது. அவரது கட்சியும் அதனை விமர்சனத்துக்கு உள்ளாக்கியது. அவரை அந்தப் பொறுப்பில் இருந்து விலகுமாறு அவரது கட்சி ஆலோசனை கூறியுள்ளது.

அவரது நடவடிக்கை வெறுமனே கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பது மாத்திரமல்ல. அதற்கு முன்னர் வந்த நியமனங்களில் கூட அவர் அவ்வாறு நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே அவர் ஏன் அவ்வாறு நடந்து கொள்கின்றார்? ஏற்கனவே அந்தச் சபையில் ஆளும் தரப்பு, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் என 19 பேர் இருக்கிறனர். அதில் சிறுபான்மைக் கட்சிகள், சிறிய கட்சிகளின் உள்ளக் கிடக்கைகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஆளாகத் தான் இவர் இருக்க வேண்டும். அவர் அவ்வாறு கடந்த காலத்தில் நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அவர் மேல் சுமத்தப்பட்டுள்ளது.

ஆகவே, அவரது கட்சியும் அவருக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றது. நான் நம்புகின்றேன். அவர் ஒரு தமிழ்த் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்ற அடிப்படையிலும், தமிழ்த் தேசிய இனத்துக்கு குரல் கொடுக்கின்றவர் என்ற அடிப்படையிலும் அவர் தான் செய்த நடவடிக்கை சரியா என்பதை அவர்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அவரின் கட்சி வழங்கிய ஆலோசனையைக் கேட்பதும் கேட்காததும் அவரின் விருப்பம்." – என்றார்.

## திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்:

# 4 பிக்குகள் உள்ளிட்ட 10 பேரின் விளக்கமறியல் 28 வரை நீடிப்பு

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் அனுமதி இன்றி புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட 10 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபர்கள் அனைவரும் இன்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவர்களில் நான்கு பௌத்த பிக்குமாரும் பொதுமக்கள் அறுவரும் அடங்குகின்றனர்.

முன்னதாக, 2025 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதியன்று, முறையான அனுமதி இன்றி கடற்கரை பாதுகாப்பு வலயத்துக்குள் புத்தர் சிலையை நிறுவப்பட்டது.

இந்தநிலையில், கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில், பொலிஸார் சிலையை அகற்ற முயன்றபோது அங்கு பதற்றமான சூழல் உருவானது.

தேரர்களும் பிரதேச மக்களும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சட்டவிரோத கட்டுமானம் மற்றும் அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற காரணிகளின் கீழ், அவர்கள் மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இன்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிமன்ற வளாகத்தில் பெருமளவிலான மக்கள் திரண்டிருந்தனர்.

இதனால் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# பிரகாஷிடம் பொலிஸார் தீவிர விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழப்பாணத்தில் "கந்தரோடை விகாரை" எனத் திசை காட்டும் பெயர்ப் பலகைகளை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா பிரகாஷிடம் பிரதேச சபையில் வைத்து பொலிஸாரால் இன்று திங்கட்கிழமை வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் – வலிகாமம் தெற்கு பிரதேச சபையால், கந்தரோடை பகுதியில் விகாரைகள் அமைந்துள்ளன என்று கூறப்படும் பகுதிகள் "கந்தரோடை தொல்லியல் ஆய்வு மையம்" என அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, பிரதேச சபையின் அனுமதியின்றி, யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்தைக்கு அருகில், தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் "கந்தரோடை விகாரை" என நாட்டப்பட்டிருந்த திசை காட்டும் பெயர்ப் பலகை கடந்த 8ஆம் திகதி பிரதேச சபையினரால் அகற்றப் பட்டது.

அதேவேளை, அந்தப் பகுதியில் காணப்படும் சந்தைக் கட்டடம் ஒல்லாந்தர் காலத்துக்கு உரியதாகும். அதன் சிறப்புகள் தொடர்பில் மும்மொழிகளிலும் எழுதிய கல்வெட்டு அந்தப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்நிலையிலையே பொலிஸார் தவிசாளரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

# நீரில் மூழ்கி மாணவன் பலி!

(கி.வசந்தன்)

வவுனியா, மயிலங்குளம் குளத்தில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 4 மாணவர்கள் மயிலங்குளம் குளத்துக்கு நேற்று மாலை குளிக்கச் சென்றுள்ளனர். இதன்போது அந்த மாணவர்கள் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த போது ஒரு மாணவன் நீரில் முழ்கி மரணமடைந்துள்ளார்.



மரணமடைந்தவர் வவுனியா, கோவில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சிவலிங்கம் டனுசியன் என்ற உயர்தர வகுப்பு மாணவனே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாமடுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வடக்குக்கு...**

அதேபோன்று இந்த விவகாரத்தில் அநுர தரப்பினர் குத்தி முறியவும் தேவையில்லை. மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தும் அவர்களின் கனவும் ஒருபோதும் பலிக்காது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

அந்தக் கூட்டங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளுக்கோ, மக்கள் பிரதிகளுக்கோ உரிய முறையில் அழைப்புகளும் விடப்படவில்லை. அதேநேரம் அழைத்த சில கூட்டங்களுக்கு உரிய அங்கீகாரமும் வழங்கப்படவில்லை.

வெறுமனே அரச நிதியில் என்.பி.பி. அல்லது ஜே.வி.பி. கட்சியினர் மட்டுமே அந்த நிகழ்வுகளில் பங்கெடுத்து இருக்கின்றனர்.

எனவே, அரச நிதியில் தேசிய மக்கள் சக்தியினர் "ஷோ" காட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் என்.பி.பியினர் வடக்குக்கு வந்து "ஷோ" அதாவது படம் காட்டுவதை நிறுத்த வேண்டும்.

இந்த விடயங்களை ஜனாதிபதி கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். இந்த அரசு தாம் அரசியல் செய்வதற்காக எமது கட்சியை விமர்சனம் செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. எமது கட்சி விடயங்களை நாங்கள் பார்த்துக் கொள்வோம்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிகாரிகள் கெடுபிடி!

நாட்டில் தேர்தல்கள் மூலம் அரசுகள் மாறலாம். அரசுத் தலைவர்கள், ஆட்சியாளர்கள் மாறலாம். அதனால் அரசின் கொள்கைகள், அணுகுமுறைகள், நடைமுறைகள் போன்றவையும் மாறலாம்.

ஆனால், நாட்டில் நிலை கொண்டிருக்கும் அதிகாரிகள் வர்க்கம் இலகுவில் மாறுவதில்லை. அரசுகளும் ஆட்சியாளர்களும் மாறும் போது மேல்மட்டத்தில் சில அதிகாரிகள் மாற்றம் அடையலாம். ஆனால் அரசு நிறுவனங்களையும் அலுவலகங்களையும் கையாளும் - ஆட்டிப் படைக்கும் - அதிகார வர்க்கங்கள் பெரும்பாலும் மாறுவதில்லை. அதுவும், புதிதாக வரும் அரசின் கொள்கைப் போக்குகளை நடைமுறைப்படுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான காரணமாக கூறப்படுகின்றது.

இந்த இக்கட்டு இப்போது அதிகாரத்துக்கு வந்துள்ள அநுரா அரசுக்கு மாத்திரமானது அல்ல. முன்னரும் அதிகாரத்துக்கு வந்து தோற்றுப் போன பல ஆட்சி தரப்புகளின் பின்னடைவுகளுக்கு அதிகாரத்தைப் பிரயோகித்த அதிகாரிகளின் அணுகுமுறையும், செயற்பாடுகளும் கூடக் காரணம்தான். அதை ஒதுக்கி விட முடியாது.

பொருளாதார இக்கட்டிலும், நெருக்கடியிலும் சிக்கி இருக்கும் நாடு, அதிலிருந்து மீளுவதற்கு வெளிநாட்டு தரப்புகளின் முதலீடுகளை வெற்றிலை வைத்து வரவேற்கின்றது. ஆனால் அப்படி நாட்டுக்கு வரும் பல வெளித்தரப்புகள் அரைவழியில் தங்கள் முதலீடுகளை மூடி கட்டிக் கொண்டு வெளியேறுகின்றன என்ற செய்தியை முழு விவரங்களோடு கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் ஆங்கில நாளிதழ் அம்பலப்படுத்தி இருக்கின்றது.

இவ்வாறு அண்மைக் காலத்தில் வெளியேறிய பல வெளிநாட்டு நிறுவனங்களின் விவரங்களை வெளியிட்டுள்ள அந்த ஊடகம், இது அரசினுடைய அணுகுமுறைச் செயற்பாட்டாலோ அல்லது அரசினுடைய கொள்கையினாலோ நடந்தது அல்ல, அதிகார வர்க்கம் - அதிகாரிகள் தரப்பு - பண்ணுகின்ற கெடுபிடிக்கட்டுகளினால் ஏற்பட்ட பின்னடைவு என்று விவரித்திருக்கின்றது.

முக்கிய பொறுப்புகளில் இருக்கின்ற அதிகார வர்க்கத்தினர் தங்கள் கடமையை சரியாக செய்யாமல் எப்போதும் குழப்பம் பண்ணிக் கொண்டிருந்தால் அவர்களை மாற்றி அமைப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டு என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது.

நாட்டின் பொலிஸ்மா அதிபராக இருந்தவரையே நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் பதவியில் இருந்து அகற்றிய முன்னுதாரணம் கடந்த ஒரு வருடத்திற்குள் நடந்தது.

இப்போதும் கூட சட்டமா அதிபர் போன்ற தரப்புகளுக்கு எதிராக ஆளுந் தரப்பினால் அதிருப்தி தெரிவிக்கப் படுகின்றது. சுயாதீனமாக செயல்படும் சட்டமா அதிபர், அரசு தரப்புக்கு இயைந்த விதத்தில் முடிவெடுக்காமல் விட்டால் அவரையும் கூட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னைக்கோனை வீட்டுக்கு அனுப்பியமை போல அனுப்ப முடியும். அதற்கான நாடாளுமன்ற வலிமை இந்த ஆட்சியாளர்களுக்கு உள்ளது.

ஆகவே அதிகார வர்க்கமும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அரசும் அந்த அதிகார வர்க்கத்தின் சுயாதீனத்தில் தலையிடாமல் அவர்களின் செயற்பாட்டுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இவை இரண்டுக்கும் இடையில் ஒரு நடுநிலையான முடிவை எடுக்கக்கூடிய இணக்கமான சூழல் உருவாகாமல் விட்டால், நாட்டின் நிர்வாகம் மோசமாக பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாவே இருக்கும்.

# புத்தளம் – கொழும்பு ரயில் சேவை 53 நாள்களின் பின்னர் வழமைக்கு





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் தொடக்கம் கொழும்பு வரையான ரயில் போக்குவரத்து திங்கட்கிழமை இன்று முதல் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 'டித்வா' புயல் காரணமாக நாடு முழுவதும் பல ரயில் பாதைகள் அழிவடைந்திருந்த நிலையில், புத்தளத்திலிருந்து சிலாபம் வரையான ரயில் பாதையும் கடுமையான சேதததுக்கு உள்ளாகியிருந்தது.

மேற்படி ரயில் பாதை பத்துளுஓயா பாலத்துக்கு அண்மித்த பகுதியில் பாய்ந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக 200 அடி நீளமான ரயில் பாதை முழுமையாகச் சேதமடைந்திருந்தது.

சேதமடைந்திருந்த ரயில் பாதையின் சீரமைப்பு பணிகளை கட்டம் கட்டமாக ரயில்வே திணைக்களத்தின் பாதை பராமரிப்புப் பிரிவின் ஊழியர்கள் முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைய, குறித்த பராமரிப்புப் பணிகள் நேற்று நிறைவடைந்த நிலையில் இன்று முதல் ரயில் சேவைகள் 53 நாள்களில் பின்னர் வழமைக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டில் பனிப்பொழிவு அதிகரிப்பு





**(ஸ்ரீ நிவாசகம் இரவீந்திரன்)**

நாட்டில் பரவலாகப் பனிப்பொழிவு அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், இரத்தினபுரி நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடுமையான பனிப் பொழிவு காணப்படுகின்றது.

இதனால் வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் எச்சரிக்கையாக பயணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகள் மற்றும் பலாங்கொடை, இறக்கு வானை , சூரியகந்த உள்ளிட்ட பல பகுதி களிலும் கூடுதலான பனி பொழிவு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

# ‘முத்திரை பதித்த யாழ். முஸ்லிம்கள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பில்












**(அஷ்ரப் ஏ சமத்)**

கலாபூஷணம் பரீட் இக்பால் எழுதிய “முத்திரை பதித்த யாழ். முஸ்லிம்கள்” எனும் நூல் வெளியீடு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.எம் முஹ்தார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நூலில் யாழ்ப்பாணத்தில் பிறந்த கல்வியாளர்கள் மற்றும் சமூக சேவையாளர் என 43 பேருடைய கட்டுரைகள், அவர்களது விவரங்கள் இடம்பெற்றுள்ளன. துருக்கித் தொப்பி, மர்ஹூம் சட்டத்தரணி எம்.சி அப்துல் காதர் தொட்டு, கலாநிதி ஏ.எம்.ஏ அசீஸ், நீதியரசர் அப்துல் காதர் தொட்டு மர்ஹூம், உலக சாதனை பரீத் நசீர் ஆகியோர்கள் அடங்குகின்றனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும் முஸ்லிம் கவுன்சில் தலைவரும் உதயம் மீடியாவின் பிரதம ஆசிரியருமான என்.எம். அமீன் முன்னிலையில் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் மற்றும் அலி அசீஸ், டாக்டர் ஏ.ஆர்.ஏ ஹபீல், வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீ கஜன், எம்.எ.சி மஹசும், மனித நேயன் இர்சாத் ஏ. காதர், ஊடகவியலாளர் றிபாஸ், இம்ரான் நெய்னார், பாத்திமா றினூ சியா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம். இசட் அஹமத் முனவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# ஆடுகளைச் சொகுசுக் காரில் கடத்தி வந்த இருவர் உட்பட மூவருக்கு விளக்கமறியல்

**(பாறுக் ஷிஹான்)**

வீடுகள் வீதிகளில் நிற்கும் ஆடுகளை சூட்சுமமாக சொகுசு காரில் கடத்திய இருவர் உட்பட மூன்று சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு சம்மாந் துறை நீதிவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புறநகர் பகுதிகளில் உள்ள ஆடுகள் சொகுசு காரில் ஏற்றி செல்லப்பட்டு களவாடப்பட்டு வருகின்றன என்று பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸா ருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை மாலை சந்தேகத்துக்கு இடமாகச் சொகுசு கார் ஒன்று நடமாடுவதாக பொது மக்க- ளிடம் இருந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடுகள் மற்றும் பொது மக்களின் தகவலுக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனையின் பிரகாரம் சம்மாந் துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என். நிசாந்த பிரதீப் குமார வின் வழிகாட்டலில் ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பல்வேறு குற்றச் செயல்கள் பிரிவின் பதில் பொறுப்பதி காரியுமான என். நிபாய்டீன் தலைமையி லான குழுவினரால் இக்கைது நட வடிக்கையில் மேற்கொள்ளப்பட்டிருந் தது.

உடனடியாக செயற்பட்ட சம்மாந் துறை பொலிஸார் குறித்த காரை பின் தொடர்ந்து மறித்துக் காரில் இருந்து 4 ஆடுகளை மீட்டுள்ளனர். அதில் பயணம் செய்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். மேலும் கைதான இரு சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் மற்றுமொரு சந்தேக நபரை கைது செய் துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட வர் களவாடப்படும் ஆடுகளை கொள்வ னவு செய்யும் சந்தேக நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சம்பவத்துடன் தொடர்பு டைய நான்காவது சந்தேக நபரை பொலி ஸார் தேடி வருகின்றனர். அவர் தற்போது தலைமைறைவாகியுள்ளார் என்று பொலி ஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட ஆடுகள் சொகுசு கார் என்பவற்றுடன் 3 சந்தேக நபர்களும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பதில் நீதிமன்ற நீதிவான் முன்னிலை யில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னி லைப்படுத்தப்பட்டனர். இதன்போது சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி 30 ஆந் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட் டார்.




# தென்மராட்சியில் காணிகளைத் துப்புரவாக்க பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் நடவடிக்கை

தென்மராட்சியில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில், பல தனியார் காணிகள் பற்றைக்கள் காடு போல வளர்ந்து நீண்ட காலம் சுத்தம் செய்யாமல் காணப்படுகின்றன.

இந்த நிலையில், அந்தப் பகுதிகளில் அதிகளவான நுளம்பு பெருகும் சூழ்நிலை உள்ளது. அவ்வாறான காணிகள் இனம் காணும் சந்தர்ப்பத்தில் காணியின் உரி மையாளர்களை சந்தித்து, காணியைச் சுத்தப்படுத்திச் சுற்றுச்சூழல் பாதுகாப் பாக இருப்பதற்கும், ஊரில் வசிக்கும் மக்கள் நோய் தாக்கம் ஏற்படாமல் பாது காப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கைகளை விடுத்துவருகின்றார் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் .

இவ்வாறான கோரிக்கைகளுக்கு மக்களும் உடன்பட்டு பற்றைக் காணி களைத் துப்புரவு செய்து வருகின்ற னர்.

பிரதேச சபை உறுப்பினர் சிவ பாதத்தின் இந்தச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற் றுள்ளதுடன் சூழலும் துப்புரவாகி வரு கிறது என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.




# கரடியனாறு குசலானமலையில் பொங்கல் விழா!

**(பழுவூரான்)**

சிங்கப்பூர் வாழ் தமிழர்களின் ஆதரவுடன் சிவதொண்டர் திருக்கூட்டம், க.பொ.த. (சாதாரணதரம்)- 1990, க.பொ.த. (உயர்தரம்)- 1993 நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கரடியனாறு குசலான மலை முருகன் ஆலயத்தினர் குசலான மலை முருகன் ஆலயத்தில மாபெரும் தைப்பொங்கல் விழாவை நேற்று நடத்தினர்.

இதன்போது அறநெறிப்பாடசாலை மீள் ஆரம்ப நிகழ்வும் கலாசார விளையாட்டு நிகழ்வுகளும் நேற்று இடம் பெற்றது.

குசலான மலை முருகன் ஆலயத்தில் தைப்பொங்கல் மற்றும் விசேட பூசையும் நடைபெற்று, ஆலயத்தில் இருந்து எழுச்சி ஊர்வலமாக கரடியங்குளம் சுவாமி ஆத்மகணானந்தா வித்தியாலயத்தை வந்தடைந்ததும் கலாசார விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு வெற்றியீட்டியோருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

கரடியங்குளம்,கரடியனாறு,சின்னத்தளவாய்,சின்னப்புல்லுமலை,வேப்பவெடௌடுவான் கிராமங்களில் இயங்கும் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.









# ஓய்வு பெற்றுள்ள சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வு





(றிபாஸ்)

சிவில் பாதுகாப்புப் படையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா இறக்காமம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சிரேஷ்ட சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஜே.றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்மாறை மாவட்ட சிவில் பாதுகாப்புப் படையின் கட்டளையிடும் தளபதி லெப்டினன் கேணல்.எச்.எஸ்.கே. எஸ். தர்மதாச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஓய்வு பெற்ற 23 உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் வழங்கி வைத்தார்.

இதேவேளை, குறுந்திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், புகைப்படக் கலை, நாட்டார் இலக்கியம், கவிதை ஓவியம் என பல்வேறு கலைத்துறைகளிலும் சிறந்த படைப்பாளியான ஸெய்ன் ஸித்திக் அதிதியால் பொன்னாடை போத்திக் கௌரவிக்கப்பட்டார்.

# பெண் தொழில் முயற்சியாளருக்கான விருதில் மாகாண விருது முள்ளிப்பொத்தானைக்கு!



(ஹஸ்பர் ஏ.எச்.)

பெண் தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கான சிறந்த விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு ஹில்டனில் இடம் பெற்றது.

இதனை மகளிர் தொழில் முயற்சியாண்மை மற்றும் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் நடுத்தரளவு தொழில் உற்பத்தியில் ஈடுபட்டமைக்கு தேசிய மட்டத்தில் இரண்டாம் இடமாக வெள்ளிப் பதக்கத்தையும், மாகாண மட்ட விருதையும் திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவை சேர்ந்த முள்ளிப்பொத்தானை எம்.ஆர்.எம். பிஸ்ரியா பெற்றுக் கொண்டார்.

ஐந்தாண்டு கால வருட சராசரி வருமானம் அடிப்படையில் சிறந்து விளங்கும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக திறம்பட வருமான மீட்டி தமது தொழில் விருத்திகளை பெற்றமைக்காக குறித்த விருதுகள் வழங்கலில் தெரிவுகள் இடம் பெற்றது.

குறித்த பிஸ்ரியா எனும் பெண் பை உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றமைக்காக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் கேடயமும், மாகாண மட்ட விருதுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனை கௌரவிக்கும் முகமாகவும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி பிரதேச செயலகத்தில் வைத்து தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்தப் பாராட்டு விழா நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர்,கணக்காளர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு நொச்சிமுனை உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட திக்கோடை கிராமத்தில் வசிக்கும் 80 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திக்கோடை அறம் கல்வி நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந்தக் கற்றல் உபகரணங்களுக்கான நிதியை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன், லண்டன் நாட்டில் வசிக்கும் கு. ஜீவிதன் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஶ்ரீநேசன், உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், ஆலோசகர் ஐ. பகலவன், அறம் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த அறம் கல்வி நிலையத்தை விழிப்புலனற்றோர் சங்கத்தின் பார்வையற்ற மாற்றுத்திறனாளி து. யோகராஜா நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.












# காரைதீவுக் கடற்கரையில் நடந்த தைப்பொங்கல் கரப்பந்தாட்டம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு விளையாட்டுக் கழகத் தினதும் விபுலானந்த சனசமூக நிலை யத்தினதும் 2026 ஆம் ஆண்டிடுக் கான வருடாந்த தைப்பொங்கல் தின கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி காரைதீவு கடற்கரையில் நேற்று மாலை இடம்பெற்றது.

அமரர் வைரமுத்து நல்லரெத்தினம் ஞாபகார்த்தமாகக் கழக உபதலைவர் எஸ்.ரதீஸ்குமார் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாக கழகப்போசர்களான உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.இராஜேந்திரன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா, சி.நந்தகுமார் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு காரைதீவு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத் தர் வி.பாஸ்கரன், இளைஞர் சேவை அதிகாரி எஸ்.ராதிந் ஆகியோருடன் கழக முன்னாள் தலைவர்கள், கழக நிர்வாக உறுப்பினர்கள், சிரேஷ்ட கனிஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பல அணிகள் கலந்து கொண்ட சுற்று போட்டியில் இறுதி போட்டியில் கே.எஸ்.ஸி. இரு அணிகள் பங்கேற் கேற்றன.

இம்முறை வரலாற்றில் முதன்முறை யாக பெண்களுக்கான போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற வீர, வீராங்கனை களுக்கான கிண்ணங்கள் பரிசுகள் அதிதிகளால் வழங்கப்பட்டன.

கழகச் செயலாளர் ஆர்.பிரகிலன நன்றியுரையாற்றினார்.











# சாதியத்துக்குள் நசுக்கப்படும் பறை மேளக் கூத்து!

கி.டினுஜிக்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

கூத்து என்பது நாட்டுப்புற கலைகளில் ஒன்றாகும். இவற்றை நாட்டுப்புறக் கூத்துகள், கிராமிய நாடகங்கள் என்றும் அழைப்பதுண்டு. இவற்றில் பொதுவாக ஆடலும், பாடலும் கலந் திருக்கும். கதையோடு சேர்ந்த ஆடல் கூத்தாகவும், இக்கூத்தின் வளர்ச்சியே நாடகமாகவும் திகழ்கிறது.

கூத்துக்களே கலைகளை வளர்ப்பதில் முன்னோடியாக விளங்குகின்றன. நாட்டுப்புறக் கூத்துகளில் பல வகைகள் காணப்படுகின்றன. அவை முறையே வசந்தன் கூத்து, மகுடிக் கூத்து, பறை மேளக் கூத்து, காத்தவராயன் கூத்து, வடமோடி தென்மோடி என பல்வேறு கூத்து வகைகள் ஒவ்வொரு பிரதேசங்களையும் அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன.

இவ்வாறான கூத்து வகைகளில் ஒன்றே பறைமேளக் கூத்து ஆகும். பறை மேளக்கூத்து சாதியத்துக்கு உரிய ஒரு கூத்து வடிவமாக நோக்கப் படுகின்றது. இந்தக் கலை மட்டக்களப்பில் உள்ள கோளாவில், புன்னைக் குளம், அம்பிலாந்துறை, ஆரையம்பதி, கல்முனை, வெல்லாவெளி, பிலாலி வேம்பு, மாவடி வேம்பு போன்ற இடங்களில் சிறப்பாக பேணப்பட்டு வருகின்றது.

இடுப்பில் பறையை கட்டிக்கொண்டு இரு வரோ அல்லது இருவருக்கு மேற்பட்டோரோ பறையில் ஒலி எழுப்பி, தாளத்துக்கு ஏற்ப ஆடும் ஆட்டமே பறைமேள கூத்தாகும். மட்டக்களப்பில் அளிக்கை செய்யப்படும் பாரம்பரிய கலை வடிவங்கள் சமூகத்தில் உயர் நிலையில் உள்ள சாதியினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. பறை மேளக் கூத்து என்பதை ஒரு சமூகத்தின் பிழைப் பூதிய தொழில் முயற்சியின் ஒரு பகுதியாக இணைந்திருந்தமையால் அது குறிப்பிட்ட சாதிக் குரியது என்று எண்ணப்படுகிறது. இது ஒரு சமயம் சார் கலையே ஆகும். பறை மேளக்கூத்தானது கோவில் வெளி வீதியில் சமதள மேடையில் நிகழ்த் தப்படும்.

### இவர்களின் சமூக பின்னணி

சமூகத்தின் பண்பாட்டைப் பேணி வருகின்ற பறை மேளக் கூத்தை வாழும் கலையாக தக்க வைத்துக் கொள்வதே கலைஞர்களின் கடப்பாடாகும். பல இடங்களில் இந்தக் கலைஞர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்றாலும் இவர்கள் செறிவாய் வாழ்வது களுதாவளையே ஆகும். இவர்களின் முன்னோர் பூமியாக இது கொள்ளப்படுகின்றது. இவர்களது தலைவன் மூப்பன் என அழைக்கப் படுகிறான். இந்த மக்களிடையே குடிமுறைகள் காணப்படுகின்றன. ஆனால் இவர்கள் குடி என்று கூறாமல் வகுத்துவார் என்று அழைக்கப்படுகின்ற னர். அலையச் சாம்பன் வகுத்துவார், வேலியாச்சி வகுத்துவார், கோதைச் சாம்பன் வகுத்துவார்,கந்த மூப்பர் வகுத்துவார், குஞ்சாரத்தை வகுத்துவார் என ஐந்து வகுத்துவார் பிரிவுகள் இவர்களிடம் காணப்படுகின்றன.

### கூத்து நிகழ்த்தும் முறையும் அது தொடர்பான விடயங்களும்

மட்டக்களப்பு கூத்துக்களை ஆரம்பத்தில் வெளியுலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் அதை விவரமாக எழுதியவர்கள் மட்டக்களப்பு அறிஞர்கள் ஆவர். இவர்கள் மட்டக்களப்பிலே பெரிதும் ஆடப் பட்டு வந்த வடமோடி, தென்மொடி ஆகிய கூத்து மரபுகளை மாத்திரமே கூத்துக்களாக குறிப்பிட்டு இருந்தனர். இவ்விரு கூத்துகளுமே முழுமை யாக வளர்ச்சி அடைந்த கூத்து வடிவங்களாக காணப்பட்டன. ஆனால் முழுமையாக நாடக வடிவத்தை அடையாததும் சடங்கு நிலை நின்று பிரிந்ததுமான சில கூத்து வடிவங்களும் மட்டக்களப் பில் காணப்படுகின்றன. இவைமுறையாக பறை மேளக்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன் கூத்து முத லானவை ஆகும். இதையும் கூத்து என்ற பெயரில் அழைக்கப்படுவது சிறப்பானதொன்று ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் இவர்களிடையே பறை மேளக்கூத்து வழக்கொழிந்து கொண்டு வருகின் றது. எனினும் பழைய தலைமுறையினரும் வருடா வருடம் சேவகம் செய்யச் செல்வோரும் இப்பறை மேளக் கூத்தினை ஆடுகின்றனர்.

தொடர்ச்சி▼

# சாதியத்துக்குள் நசுக்கப்படும் பறை மேளக் கூத்து!

தொடர்ச்சி▲

மந்திரிமார், பெரிய மனிதர்கள் கிராமப்புறத்துக்கு வரும் காலங்களில் இப் பறை மேளக் கூத்துடன் அவர்களை வரவேற்கும் வழக்கம் இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது. ஆனால் சமீப காலத்தில் மேளம், நாதஸ்வரம் போன்றன அந்த இடத்தை பிடித்துள்ளன. இவர்கள் தாம் வாசிக்கும் இசை கருவியை பறை என அழைப்பர். பெரிய குடிகள் மத்தியில் சேவகம் செய்யச் செல்லும் இடத்து இராசபறையை சேலையால் மூடி எடுத்துச் செல்வர். இது இராசமேளம் என அழைக்கப்படும். பறையில் ஒரு பகுதி பெண் ஆட்டுத் தோலாலும் மறுபகுதி கிடாய் ஆட்டுத் தோலாலும் செய்யப்பட்டுக் காணப்படும். பறையை தட்டுவதற்கு எக்ஸோராவின் கம்பு பயன்படுத்தப்படும்.

மரண வீடுகளில் பாய் விரிக்கப்பட்டு இராசமூலம் தனியாக அதன் மீது வைக்கப்பட்டிருப்பது பண்டைய வழக்கம். மிருதங்கத்தில் உள்ளது போல் பறையில் சுருதி வீதம் கிடையாது. இரு விதமான ஓசைதான் இப்பறையில் வரும். ஒரு பக்கம் உச்ச இறுக்கமான திண் எனும் ஒலியையும் தொப்பை அதைவிட குறைந்த ஒலியையும் கொண்டு காணப்படும். இன்னொரு பறையும் இவர்களிடம் வழக்கத்தில் உண்டு. இதன் பெயர் சிறுபறை. ஒரு பக்கம் மாத்திரம் வாசிக்க கூடிய, இரண்டு பறைகளை இணைத்து அடிப்பர். பக்கம் முகத்தை பார்த்த படி நிற்க கழுத்தில் தூக்கிக் கொள்வர். பின்னர் துணியில் வளைந்த இரு சிறிய கம்புகளில் இரு கைகளாலும் இருபறைகளின் தலைப்பாகத்திலும் மாறி மாறி ஓசை எழுப்புவர்.

இப்பறைகளுக்கும் பின்னணியாக சொர்ணாலி எனும் வாத்தியத்தால் ஓசை எழுப்பப்படும். நாதஸ்வர வடிவில் சொனாளி அமைந்திருப் பினும் இதன் நீளம் ஒரு அடி அளவே ஆகும். இது முகவீணையை ஒத்தது. பலவகையான பறைகள் சங்க காலங்களில் குறிப்பிடப்படுகின்றன. இவையாவும் சிறுபறை,பெரும் பறை என்ற இரு பிரிவுகளில் அடங்கும். அகநானூறு என்ற இலக்கியத்திலும் பறைமேளக் கூத்து பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் தம் தலைவர்களின் தாளத்தை வரிசையாக வாசிப்பதையும் வரிசையாக சேவகம் செய்ய செல்லும்போது தலைவர்களின் புகழைத் தொகுத்து கூறி யாசிப்பதையும் காண முடிகிறது. சங்ககாலத்தில் காணப்பட்ட வெறியாட்டம், பலி கொடுத்தல், வேல நாட்டம் முதலிய ஆட்ட முறைகளின் சில கூறுகள் மட்டக்களப்பு ஆட்ட முறைகளை நினைவூட்டுவது போல் சங்க கால பறையர், கோடியர் ஆகியோரை மட்டக்களப்பு பறையரும் நினைவூட்டுகின்றனர். பறை மேளக் கூத்தில் மொத்தமாக 18 வகை தாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கோயில் வெளியிலே மக்கள் இருந்தோ, நின்றோ பார்க்க சமதள அரங்கில் இந்தக் கூத்தை ஆடுவார்கள். மற்றும் ஊரில் புதுவருடத்தை முன்னிட்டுக் கொடை பெறுவதற்காகவும் இந்த கூத்து அளிக்கை செய்யப்பட்டது.

இதேபோன்று மரணச் சடங்கில் பிரேதம் கொண்டுவரப்படும் போது சந்தியை மறித்து



நின்று ஆடுவர். கோயில் முன்றலில் நின்று கூத்தை ஆரம்பிக்கும் முன் மூப்பன் ஒரு தாளத்தை வாசிப் பான். அது அடுத்து அவன் வாசிக்கப் போகும் தாளங்களின் கலவை ஆகும். அத்தாளத்துடன் கூத்து பார்க்க வரும் மக்கள் கூத்துக்காரரைச் சுற்றி வெளியில் கூடுவர்.

இவர்களின் ஆடை அமைப்பை நோக்குவோ மாகில் ஏனைய கூத்து வடிவங்களை போல விசேட உடுப்புகள் ஏதும் இல்லை. எனினும் தன்னளவில் தனித்துவம் காணப்படுகின்றது. ஒரு கயிற்றின் மேலே சீலையை நீளப்பாட்டில் இரண்டாக மடித்து கொய்து போட்டு இடுப்பில் இதனை கட்டிக் கொள்வர். தலையில் தலைப்பாகை கட்டிக் கொள் வர் கையில் முழங்கைக்கும் தோளுக்கும் இடையில் வெண்டையங்கள் அணிந்து கொள்வர். கைகளிலும், கால்களிலும் சலங்கை அணிந்து கொள்வர். இடுப் பில் கட்டி இருக்கும் தவிலை வெள்ளை சேலையால் சுற்றியிருப்பர். சால்வை ஒன்றையும் அணிந்து கொள்வர். இங்கு உடை என்பது இவர்களின் அழகி யலை வெளிப்படுத்தாது அவர்களின் பொருளாதார நிலையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

பறைமேள கூத்து ஆட்டம் முறை பற்றி நோக் கும்போது தாளக்கட்டுகள் ஆடும் சூழலுக்கு ஏற்ப அமைகின்றன. கோயில், இறப்பு வீடு, மங்கள

தொடர்ச்சி▼

# சாதியத்துக்குள் நசுக்கப்படும் பறை மேளக் கூத்து!



தொடர்ச்சி▲

நிகழ்வுகள் எனும் மூன்று சூழல்களில் ஒவ்வொன்றுக்கும் ஆறு ஆறு தாளக்கட்டுகளாக மொத்தம் 18 தாளக்கட்டுகள் உள்ளன. இவை முறையே ஆரம்பத்தாளம், பூசைத்தாளம், கோணங்கித் தாளம், இராசா வரவுத்தாளம், வரிசைத்தாளம் என்பனவாகும்.

**இந்தக் கூத்தில் பங்கேற்கும் கலைஞர்கள்**

பறை மேள கூத்திலே சொர்ணாலி வாசிக்க ஒரு கலைஞரும், பறை அடிப்பதற்கு இரண்டு நபர்களும் தம்பட்டம் வாசிக்க என கலைஞர்களும் காணப்படுவர். சில சமயம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கலைஞர்கள் இந்த கூத்திலே பங்குதாரர்களாக காணப்படுவர். இந்த பறை மேளக் கூத்திலே சொர்ணாலி இசைக்கும் கலைஞரே முக்கியத்துவம் பெற்றவராக காணப்படுவார்.

தற்காலத்தில் குறித்த நிகழ்த்து கலையின் பயன்பாடு பற்றி நோக்கும்போது, இன்றைக்கு சிற்சில இடங்களிலேயே இக்கூத்தைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனாலும் சில இடங்களில் இவ்வாறு வழக்கொழிந்து வரும் கூத்துக்களை மீள் உருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதை காணக் கூடியதாய் உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன் சிறுவர் தின கொண்டாட்டத்தில் இந்து கலாச்சார அமைப்பால் பறைமேளக் கூத்து கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு விருதுகளும் கொடுக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாய் உள்ளது.

**இந்த நிகழ்த்துகலை எதிர்நோக்கும் சவால்கள்**

அருகி வரும் ஒரு கலையாக காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தை பொறுத்த வரையில் இக்கூத்தானது அருகி வரும் சூழல் காணப்படுவதை காணக் கூடியதாய் இருக்கின்றது. இளம் சமுதாயத்தினரிடையே இந்த கூத்துக்கள் தொடர்பான ஆர்வம் மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. சாதியம் சார்ந்து இக்கலை ஒதுக்கப்படுகின்றது.

சாதியம் சார்ந்து நோக்கப்படுவதால் இக்களையானது அழிந்து வரும் சூழல் காணப்படுகின்றது. இக்கூத்துக்களை நிகழ்த்தும் சமூகத்தினர் ஒதுக்கப்பட்ட மக்களாக காணப்படுவதால் அவர்களது கலையையும் மக்கள் அவ்வாறே புறக்கணிப்பதை காணக் கூடியதாய் இருக்கின்றது. நவீனம் என்ற ரீதியிலும் இதன் சுயம் அழிக்கப்படுகின்றது. நவீனத்துவ சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு அதன் அடிப்படையில் பாரம்பரிய கலைகள் நிகழ்த்தப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக வைத்து நோக்கும்போது பறை மேளக் கூத்தானது தமிழர் தம் பாரம்பரியத்தை பறைசாற்றும் ஒரு அரங்க வடிவமாகும். ஆனால் அவை நாடகம் என்ற முழு வளர்ச்சியை பெறவில்லை. சாதியம் என்ற ரீதியில் இது வழக்கொழிந்து வரும் நிலையை காணக்கூடியதாய் உள்ளது.

# அசாம் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸுக்கு தோல்வி நிச்சயம்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



இந்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலின்போது அசாம் மக்களிடமிருந்தும் காங்கிரஸுக்கு ஒரு கடுமையான பதில் கிடைக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாகான் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசிரங்கா மேம்பாலத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும், இரண்டு புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தும் பேசிய பிரதமர் மோடி,

"ஆட்சியை பிடிப்பதற்காகவும், வாக்குகளைப் பெறுவதற்காகவும் காங்கிரஸ் கட்சி அசாமின் மண்ணை ஊடுருவல்காரர்களிடம் ஒப்படைத்தது. காங்கிரஸ் கட்சி பல ஆண்டுகளாக அசாமில் ஆட்சியில் இருந்தது. ஆனால் அந்த காலகட்டத்தில் ஊடுருவல் அதிகரித்துக்கொண்டே இருந்தது.

காங்கிரஸுக்கு ஒரே ஒரு கொள்கைதான் உள்ளது, ஊடுருவல்காரர்களைக் காப்பாற்றுவது. ஊடுருவல்காரர்களின் உதவியுடன் அதிகாரத்தைப் பெறுவது. நாடு முழுவதும் காங்கிரஸும், அதன் கூட்டணிக் கட்சிகளும் இதைத்தான் செய்து வருகின்றன.

பிஹாரிலும், அவர்கள் ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்க பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். ஆனால் பிஹார் மக்கள் காங்கிரஸை முற்றிலுமாகத் துடைத்தெறிந்தனர். இப்போது அசாம் மக்களின் முறை. அசாம் மண்ணிலிருந்தும் காங்கிரஸுக்கு ஒரு கடுமையான பதில் கிடைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இப்போது அசாமில், பா.ஜ.க. அரசாங்கம் ஊடுருவல் பிரச்சினையை திறம்படக் கையாண்டு வருகிறது. மேலும் உங்கள் நிலத்தை சட்டவிரோத ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்து வருகிறது. சமீபத்தில் வந்துள்ள தேர்தல் முடிவுகளில், மக்களின் ஆணை மிகவும் தெளிவாக உள்ளது. இப்போது வாக்காளர்கள் நல்லாட்சியையும், வளர்ச்சியையும் விரும்புகிறார்கள். அதனால்தான் நாங்கள் மும்பையில் வெற்றிபெற்றதற்கான கொண்டாட்டங்கள் காசிரங்காவில் நடைபெறுகின்றன.

காசிரங்கா ஒரு தேசியப் பூங்கா மட்டுமல்ல, அது அசாமின் ஆன்மா. ஒரு காலத்தில், காசிரங்காவில் காண்டாமிருக வேட்டை அசாமிற்கு ஒரு பெரிய கவலையாக இருந்தது. 2013-14 ஆம் ஆண்டில், 12 இற்கு மேற்பட்ட ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் கொல்லப்பட்டன. பா.ஜ.க. அரசாங்கம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தி, வனத்துறைக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியது. இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டில் காண்டாமிருகங்கள் வேட்டையாடப்பட்ட சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை." - என்றார்.

# 'பராசக்தி' திரைப்படத்தில் வரும் செழியன் கதாபாத்திரம் நான்தான்

## சீமான் தெரிவிப்பு





"'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான். தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது."

- இவ்வாறு நாம் தமிழர் கட்சியில் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான 'பராசக்தி' படத்தைப் பார்த்த பிறகு நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர்,

"தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது. 'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான்.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் மொழி முக்கியம். விரும்பினால் எந்த மொழியையும் கற்போம். தேவை என்றால் நிச்சயம் வேறு மொழிகளை கற்போம். ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள அதிகபட்சமாக ஆறு முதல் ஏழு மாதங்கள் ஆகும். தேவை ஏற்படும்போது அதை கற்கத் தானே போகிறோம்.

அதை விட்டுவிட்டு ஒரு மொழியைக் கட்டாயம் படிக்க வேண்டும் எனச் சொல்வதை நிச்சயம் ஏற்க முடியாது. அது சரியாகவும் இருக்காது. அனைத்து மொழிகளையும் மதிக்க வேண்டும். வலுக்கட்டாயமாக இந்தி திணிப்பைச் செய்யக்கூடாது என்பதற்கு கேரளா, வங்காளம் என அனைத்து மாநிலங்களிலும் இருந்து எதிர்ப்பு இருந்ததாகவே இந்தப் படம் சொல்கிறது. இறுதியாக ஒரு படம் முடியும் தருவாயில் 'தமிழ் வாழ்க' என வருகின்றதென்றால் அதை பாராட்டியாக வேண்டும்.

மொழிப் போராட்ட உணர்வை எடுத்துக்கொண்டு திரைக்கதையைக் கற்பனையாக உருவாக்கியுள்ளனர். 'பராசக்தி' படத்தை பெண் இயக்குநர் நன்றாக இயக்கியுள்ளார். அவர் இயக்கிய மூன்று படங்களையும் பார்த்துள்ளேன். இது ஒரு பெரிய முயற்சி.

படத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா என அனைவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஜி.வி பிரகாஷின் பின்னணி இசை, பாடல் மிகச் சிறப்பாக இருந்துள்ளது. மொத்தத்தில் 'பராசக்தி' ஒரு நல்ல படமாக வெளிவந்துள்ளது. ஒளிப்பதிவும் நன்றாக உள்ளது. ஆனால் அவர்கள் மொழிப் போரை அப்படியே காட்டவில்லை. இது நமது மொழிப்போர் வரலாறும் இல்லை. அதேநேரம் அப்படம் மொழி உணர்வைச் சிதைக்கவும் இல்லை." என்று தெரிவித்துள்ளார்.





# பாகிஸ்தான் வணிக வளாக தீ விபத்து; உயிரிழந்தவர்கள் 14 ஆக அதிகரிப்பு

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில், மீட்புக் குழுக்கள் கட்டட இடிபாடுகளில் இருந்து மேலும் 8 உடல்களை மீட்டெடுத்ததை அடுத்து, உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

இந்த தீவிபத்தில் 60 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்று கராச்சி மேயர் முர்தசா வஹாப் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் கடந்த சனிக்கிழமை இரவு குல் பிளாசா என்ற மொத்த மற்றும் சில்லறை விற்பனை வணிக வளாகத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. மூன்று தளங்களில் கடைகளைக் கொண்டிருந்த இந்த கட்டடத்தில் ஏற்பட்ட தீ, ஞாயிற்றுக்கிழமை இரவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்து ஏற்பட்ட உடனேயே 6 உடல்கள் மீட்கப்பட்டன. மேலும், காயமடைந்தோர் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர். இருப்பினும், தொடர்ந்து தீ பரவியதால், மீட்புக் குழுக்களால் உள்ளே சென்று மீட்புப்பணிகளை தொடர முடியவில்லை.

இதுகுறித்து மீட்புப் பணிக் குழுவின் தலைமைச் செயல் அதிகாரி அபித் ஜலால் பேசுகையில்,

"தீ அணைக்கப்பட்டதும், நாங்கள் கட்டடம் குளிர்வடையும் வரை காத்திருக்காமல், வலுக்கட்டாயமாக உடனடியாக உள்ளே சென்று சிக்கியிருந்தவர்களை மீட்க முயன்றோம். அப்போது மேலும் எட்டு உடல்களைக் கண்டெடுத்தோம்; அவற்றில் சில உடல்கள் கடுமையாகக் கருகியிருந்தன. தீ விபத்தால் கட்டிடத்தின் கட்டமைப்பு பலவீனமடைந்துள்ளது. மேலும் பல கட்டமைப்பு இடிந்து விழக்கூடும் என்பதால், காணாமல் போனோரை தேடும் பணியை தொடர்ந்து வருகிறோம்." என்று கூறினார்.

இன்று காலை சம்பவ இடத்திற்கு வந்த சிந்து மாகாண ஆளுநர் கம்ரான் டெசோரி, கட்டடத்திற்குள் 70 பேர் இன்னும் சிக்கியுள்ளனர் என ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"நாங்கள் மிகுந்த கவலையுடனும் அதிர்ச்சியுடனும் இருக்கிறோம். சிக்கியிருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன, ஆனால் இது ஒரு தேசிய துயரம்" என்று டெசோரி கூறினார்.





# ஜல்லிக்கட்டுப் போட்டி தி.மு.க. விழாவாகியது

## தமிழிசை கண்டனம்

ஜல்லிக்கட்டை தி.மு.க. விழாவாக மாற்றிவிட்டனர் என்று தமிழக பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தி.நகரில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழக மக்கள் பிரதமரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இதற்காகப் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரதமரின் வருகை 2026 பா.ஜ.கவின் வெற்றிக்கான அடித்தளமாக இருக்கும்.

ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு அரசு வேலை வழங்குவது வரவேற்கத்தக்கது. ஆனால், ஜல்லிக்கட்டை 'காட்டுமிராண்டித்தனமான விளையாட்டு' என்று விமர்சித்த காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி வைத்துள்ளது. பா.ஜ.க. அரசுதான் தடையை நீக்கி ஜல்லிக்கட்டை மீட்டெடுத்தது. ஆனால், தற்போது அதைத் தி.மு.க.வின் விழாவாக மாற்றிவிட்டனர். இது கண்டிக்கத்தக்கது.



தி.மு.க - காங்கிரஸ் கட்சிகளுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாத சூழல் நிலவுகிறது. 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி ஒன்றாக நீடிக்குமா என்று சொல்ல முடியாது." என்று தெரிவித்தார்.



# ஸ்பெயினில் இரண்டு ரயில்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் 21 பேர் உயிரிழப்பு

தெற்கு ஸ்பெயினில் உள்ள அடாமுஸ் நகரத்துக்கு அருகே நேற்று மாலை இரண்டு ரயில்கள் மோதிக் கொண்ட விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், இது நாட்டுக்கு ஆழ்ந்த வேதனை நிறைந்த இரவு என்று கூறினார்.

மலகாவிலிருந்து மாட்ரிட் நோக்கிச் சென்ற ஐரியோ அதிவேக ரயில் அடாமுஸ் அருகே தடம் மாறி மற்றொரு தண்டவாளத்துக்குள் நுழைந்தது. அந்த ரயில் மோதியதில், எதிரே வந்த ரயில் தடம் புரண்டது என்று ஸ்பெயினின் அடிஃப் ரயில் சேவை நிறுவனம் தெரிவித்தது.

நேற்று மாலை 6.40 மணிக்கு மலகாவிலிருந்து ஐரியோ ரயில் புறப்பட்ட சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு இந்த விபத்து நடந்துள்ளது. இந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர் எனவும் இந்த எண்ணிக்கை உயரக் கூடும் என்றும் ஸ்பெயின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆஸ்கார் புயன்டே கூறினார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 100 பேரில், 25 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் என அண்டலூசியா மாகாண தலைவர் ஜுவான்மா மோரேனோ தெரிவித்தார்.

"விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. நேராகச் செல்லும் தண்டவாளப் பாதையில் ரயில் தடம் புரண்டது உண்மையிலேயே விசித்திரமானது. இந்தத் தண்டவாளம் மே மாதத்தில் புதுப்பிக்கப்பட்டது" என்று ஸ்பெயினின் போக்குவரத்துத் துறை அமைச்சர் புவென்டே கூறினார்.

இந்த விபத்தினை தொடர்ந்து மாட்ரிட் மற்றும் அண்டலூசியாவிற்கு இடையிலான அனைத்து ரயில் சேவைகளையும் அடிஃப் நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது.






பக்கம் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 19/01/2026

**கனடாவின் டர்ஹம் பிராந்தியத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு**

டர்ஹம் பிராந்தியத்தில் வீடுகளில் உட்புகுந்து திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்களுக்கு டர்ஹம் பிராந்திய பொலிஸ் பாதுகாப்பு எச்சரிக்கை அறிவித்துள்ளது.

02



# கிரீன்லாந்திற்கு துருப்புகளை அனுப்பும் கனடா: நேட்டோ உடன் இராணுவப் பயிற்சிக்கு திட்டம்

**கிரீன்லாந்திற்கு கனேடிய துருப்புகளை அனுப்புவது குறித்து பிரதமர் கார்னி ஆலோசித்து வருகின்றார் என தகவல் வெளியாகியுள்ளது.**

**டென்மார்க் நாட்டின் தன்னாட்சி பிராந்தியமான கிரீன்லாந்தை சொந்தமாக்கும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது.**

**இதனால், ஆர்க்டிக் பிராந்தியத்தில் பதற்றம் நிலவி வரும் நிலையில், கிரீன்லாந்தை தன்னாட்சி அதிகாரம் கொண்ட பிராந்தியமாக அங்கீகரிக்கும் ஐரோப்பிய நாடுகள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அதே சமயம் பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் ஆர்க்டிக் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கி தங்கள் துருப்புகளை அப்பகுதியில் நிலைநிறுத்தி வைத்துள்ளன.

இந்நிலையில் கிரீன்லாந்து பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நேட்டோ நட்பு நாடுகளின் கூட்டு இராணுவ பயிற்சிக்கு தங்கள் நாட்டின் தரைப்படை வீரர்களை அனுப்புவது தொடர்பாக கனேடிய பிரதமர் மார்க் கார்னி தீவிரமாக ஆலோசித்து வருகின்றார் என CBC ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே கனடா தங்களது ராயல் கனேடியன் விமானப்படையின் குழு நேட்டோ பயிற்சிகளில் பங்கேற்க உள்ள நிலையில், கனடா தன்னுடைய பங்களிப்பை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இருப்பினும், அமெரிக்காவுடனான உறவு மோசமாக இருக்கும் நிலையில், இந்த நடவடிக்கை விரிசலை மேலும் தீவிரப்படுத்தலாம் என்பதால் கனடா அரசு துருப்புகளை அனுப்புவது தொடர்பாக இன்னும் உறுதியாக முடிவு எடுக்கவில்லை.

ஆர்க்டிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பொருளாதார தாக்கம் ஆகியவற்றை கனேடிய அரசு அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.







# அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட ‘இரசாயன அபாயம்’

## 8 பேர் மருத்துவமனையில் அனுமதி

நோர்த் யோர்க் பகுதியில் உள்ள கான்டோ எனப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை ஏற்பட்ட இரசாயண கசிவு சம்பவத்தைத் தொடர்ந்து, லேசான காயங்களுடன் 8 பேர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என டொராண்டோ அவசர மருத்துவ சேவையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் வில்லோடேல் பகுதியில், யோங் வீதியின் கிழக்கே மற்றும் நெடுஞ்சாலை 401 இன் வடக்கே அமைந்துள்ள 78/80 ஹாரிசன் கார்டன் புளூவர்ட் என்ற முகவரியில் உள்ள கான்டோ வளாகத்தில் நடந்தது. இந்த வளாகம் பொதுவான லோபி மற்றும் தரைத்தளத்தால் இணைக்கப்பட்ட மூன்று உயர்மாடிக் கோபுரங்களை கொண்டுள்ளது.

அவசர சேவையினர் மாலை 5 மணிக்கு பின்னர் அந்த இடத்திற்கு அழைக்கப்பட்டனர் என தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த அவசர மருத்துவ பணியாளர்கள், மொத்தம் 11 பேரை பரிசோதனை செய்ததாகவும், அதில் 8 பேர் மேலதிக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர் எனவும் கூறினர்.

# போர்ட் வாகனங்கள் தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை விடுப்பு

கனடாவில் முன்னணி வாகன நிறுவனமான போர்ட் வாகனங்கள் தொடர்பில் எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எஞ்சின் பிளாக் ஹீட்டரில் ஏற்படக்கூடிய ஷார்ட் சர்க்யூட் காரணமாக தீ விபத்து அபாயம் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

போர்ட் நிறுவனத்தின் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வாகனங்களை இரண்டு தனித்தனியான மீளப்பெறல் நடவடிக்கைகளின் கீழ் திரும்பப்பெறுவதாக கனடிய போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

சில வாகனங்களில் எஞ்சின் பிளாக் ஹீட்டரில் இருந்து குளிரூட்டும் திரவம் ஒழுகும் அபாயம் உள்ளது.

இதனால், பிளாக் ஹீட்டர் இணைக்கப்பட்டுள்ள போது ஷார்ட் சர்க்யூட் ஏற்படலாம் என இரு மீளப்பெறல் அறிவிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மீளப்பெறல் அறிவிப்புகள் ஜனவரி 9 அன்று முதன்முறையாக வெளியிடப்பட்டு, பின்னர் வியாழக் கிழமை புதுப்பிக்கப்பட்டன. 2.0 லிட்டர் எஞ்சின் பொருத்தப்பட்ட சில வாகனங்களுக்கு மட்டுமே இந்த மீளப்பெறல் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்ட் எஸ்கேப், போர்ட் போகஸ் மற்றும் லிங்கொன் எம்.கே.சீ, ஃபோர்டு பிராங்கோ, ஃபோர்டு பிராங்கோ ஸ்போர்ட்,ஃபோர்டு எஸ்கேப், ஃபோர்டு எக்ஸ்ப்ளோரர், ஃபோர்டு ஃபோகஸ், ஃபோர்டு மேவரிக், ஃபோர்டு ரேஞ்சர், லிங்கன் கோர்செய்ர், லிங்கன் எம்கேசி, ஆகிய மாடல்கள் இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு Ford நிறுவனத்தின் இணையதளத்தைப் பார்வையிடவோ அல்லது 1-800-565-3673 என்ற எண்ணை தொடர்புகொள்ளவோ வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சமீபத்தில் நடந்த ஒரு திருட்டு சம்பவத்தின் காணொலி பதிவை பொலிஸார் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளது.

43 விநாடிகள் கொண்ட அந்த காணொலியில், கறுப்பு உடை அணிந்த இருவர் ஒரு வீட்டின் பின்புற வேலியைத் தாண்டி உள்ளே நுழைவதும், பின்னர் வீட்டின் முக்கிய மாடி மற்றும் அடித்தளப் பகுதிகளில் சுற்றி நடந்து விட்டு வெளியேறுவதும் பதிவாகியுள்ளது.




மக்கள் அனைவரும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சந்தேகத்திற்கிடமான நபர்கள், வாகனங்கள் அல்லது நடவடிக்கைகள் எதுவும் காணப்பட்டால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளிக்க வேண்டும் என டர்ஹம் பிராந்திய பொலிஸார் கோரியுள்ளனர்.

மேலும், சந்தேகநபர்களின் அடையாள விவரங்கள், அவர்கள் பயன்படுத்தும் வாகனத்தின் வகை மற்றும் பதிவு எண் போன்றவற்றை இயன்ற வரை குறிப்பெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடனடி தகவல் அளிப்பது, நடந்து வரும் விசாரணைகளுக்கு பெரிதும் உதவுவதோடு, குற்றச் சம்பவங்களின் முறை மற்றும் சந்தேகநபர்களை அடையாளம் காணவும் உதவுகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# கனடாவில் பாரியளவில் முதலீடு செய்யும் கட்டார்

கனடாவின் முக்கிய கட்டுமானத் திட்டங்களுக்காக கட்டார் முக்கியமான மூலோபாய முதலீடுகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

தோஹாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை அறிவித்தார்.

இந்த முதலீடுகள் மூலம் திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்படுவதுடன், சக்திவளத் துறைகள் மேலும் வேகமெடுக்கும் எனவும் கனடியர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் எனவும் பிரதமர் கார்னி கூறியுள்ளார்.கனடா - கட்டார் இரு தரப்பு உற வுகளில் இது புதிய அத்தியாயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான மக்களுக்கிடையேயான கலாசார உறவுகளையும் வலுப்படுத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, சுற்றுலா மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்த கனடா - கட்டார் இடையிலான நேரடி விமான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

“வேறு நாடுகளின் கலாசாரம் மற்றும் பார்வைகளை மக்கள் புரிந்து கொள்ளும்போது, அவர்கள் செழுமையடைகிறார்கள்; ஒருவர் மீது ஒருவர் அதிக நம்பிக்கையும் உருவாகிறது. அதனால் ஒன்றாக மேலும் செய்யவும், ஒன்றாக கட்டியெழுப்பவும் அவர்கள் விரும்புகிறார்கள்,” என கார்னி தெரிவித்துள்ளார்.







